**30.10.2025**

**MCOP.No.24/2023**

**ம.சா.1 : சுதந்திரபிரியா**

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் விபத்து நடந்த சமயத்தில் நான் அங்கு தான் இருந்தேன். அந்த பேருந்து சென்னை செல்லும் பேருந்து. தேசிய நெடுஞ்சாலையில் தான் எங்களை ஏற்றுவதற்காக வாகனம் நின்றது. பொதுவான ஆம்னி பேருந்துகள் சேலத்தில் இருந்து எடுத்தால் சென்னையில் தான் நிற்கும் என்றால் சரிதான். பெத்தநாயக்கன்பாளைத்தில் சுமார் 10 பேர் ஏறினோம். பெத்தநாயக்கன்பாளையத்தில் ஏறினாலும் சேலம் - சென்னை கட்டணம் தான். பெத்தநாயக்கன்பாளையத்தில் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் சர்வீஸ் சாலை உள்ளது. அதற்கு அடுத்தது தான் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. அது 4 வழி சாலை. தேசிய நெடுஞ்சாலையில் அப்போது சாலை குறுக்கு தடுப்பு இல்லை (Divider). ஆம்னி பேருந்து வாகனம் நிறுத்திய இடத்தில் பஸ் நிறுத்தம் இல்லை. பஸ்ஸின் வலது பக்கத்தில் தான் லக்கேஜ்களை ஏற்றினோம்.

2) அவ்வாறு வலது பக்கத்தில் லக்கேஜ்களை ஏற்றிக்கொண்டு இருக்கும்போது தான் லாரி பஸ் மீது பின்னால் மோதியது. பஸ்சின் பின்புற சிவப்பு விளக்கு எறிந்து கொண்டு இருந்தது. வலது பக்கம் இடம் இருக்கும் என்று தான் லாரி ஓட்டுநர் வந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக வலது புற பின்புறத்தில் திறப்பு எதுவும் இருக்காது. போலீஸ் வழக்கை விசாரித்து இரு வாகனத்தின் மீது தான் தவறு உள்ளது என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும் இரண்டு வாகன ஓட்டுநர்களின் மீது தான் தவறு என்று சொல்லி உள்ளேன்.

3) பஸ் நிறுத்தம் இல்லாத இடத்தில் வாகனம் நிறுத்துவது தவறு என்றால் வாகனம் லேட்டாக வந்ததால் வாகன ஓட்டுநர் மற்றும் கிளினர் வாகனத்தை தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தினார்கள். நாங்கள் ஆம்னி பேருந்தை சர்வீஸ் ரோட்டில் தான் நிறுத்த சொன்னோம். பேருந்து ஓட்டுநர் நாங்கள் அவ்வாறு தான் பேருந்ததை

நிறுத்துவோம் என்று சொன்னார். மேற்படி இடத்தில் வாகனம் நிறுத்துவது தவறு என்றும் அதை அனுசரித்து அந்த இடத்திற்கு சென்று அங்கு நிறுத்தப்பட்ட வாகனத்தில் ஏறியது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் வருமானம் குறித்து நான் வருமான வரி சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். மாதம் ரூ.1 லட்சம் வருமானம் காண்பித்துள்ளோம். வருடம் 10 லட்சத்திற்குள் வருமானம் காட்டி உள்ளோம். எனது கணவரின் வருமானம் வருடம் ரூ.3,43,825/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4) மேற்படி போகஸ் பாய்ண்ட் என்ற நிறுவனத்தின் வருமானம் மட்டும் தான் அவருடைய வருமானம். வேறு வருமானம் கிடையாது. போகஸ் பாய்ண்ட் என்ற நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி கணக்கில் போகஸ் பாய்ண்ட் என்ற நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். போகஸ் பாய்ண்ட் நிறுவனம் அவருடைய இறப்பிற்கு பின்னால் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருந்ததால் அவருடைய பங்குதாரர் அந்த நிறுவனத்தை முழுவதுமாக எடுத்துக்கொண்டார்.

5) மேற்படி நிறுவனம் நஷ்டத்தில் இயங்கியதால் அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு எனக்கு எந்த நஷ்ட ஈடும் தரமுடியாது என்று சொல்லி விட்டார். எனது கணவர் மாதம் ரூ.10000/- தான் மேற்படி போகஸ் பாய்ண்ட் நிறுவனத்தில் சம்பாதித்தார் என்றும் வருமான வரி கணக்கை மிகைப்படுத்தி காட்டினால் நஷ்டத்தில் நடக்கும் நிறுவத்திற்கு ஏதேனும் வங்கியில் கடன் பெறலாம் என்ற நோக்கத்தில் வருமான வரியை மிகைப்படுத்தி காட்டி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் போகஸ் பாய்ண்ட் நிறுவனத்தின் வரவு செலவு கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6) இந்த விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரிலும் நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், நிருபண வாக்குமூலத்திலும் "**பஸ் நிறுத்தம் இல்லாத இடத்தில் வாகனம் நிறுத்துவது தவறு என்றால் வாகனம் லேட்டாக வந்ததால் வாகன ஓட்டுநர் மற்றும் கிளினர் வாகனத்தை தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தினார்கள். நாங்கள் ஆம்னி பேருந்தை சர்வீஸ் ரோட்டில் தான் நிறுத்த சொன்னோம். பேருந்து ஓட்டுநர் நாங்கள் அவ்வாறு தான் பேருந்தை நிறுத்துவோம் என்று சொன்னார்"**என்று சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது இருந்த மனநிலையில் அதை சொல்லவில்லை. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் 13.02.2025 அன்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிருபண வாக்குமூலத்திலும் மேற்படி விவரத்தை பொறுத்து நான் குறிப்பிட்டு சொல்லவில்லை.

7) நான் மேற்படி பேருந்தை என்னுடைய வசதிக்காக நாங்கள் நிறைய நபர்கள் இருந்ததால் லக்கேஜ்கள் நிறைய இருந்ததாலும் நிற்க சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நாங்கள் பஸ்சை அந்த இடத்தில் நிறுத்த சொன்னதும் ஒரு காரணம் என்று சொன்னால் நாங்கள் நிறுத்த சொல்லவில்லை. சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை 4 வழி சாலை தான். மேற்படி விபத்தின்போது பேருந்து தேசிய நெடுஞ்சாலையில் ஓரமாக நின்று கொண்டு இருந்தது. வெள்ளை கோட்டிற்கு தாண்டி நிற்கவில்லை. பேருந்தின் வலதுபுறத்தில் இரண்டு கனரக வாகனங்கள் போய் வரும் அளவிற்கு அகலமான ரோடு தான் என்று சொன்னால் சரியல்ல.

8) மேற்படி ரோட்டில் இரண்டு வண்டி தாராளமாக சென்று வரலாம். அந்த இடம் சாலையில் மேம்பாலத்தில் இருந்து இறங்கும் இடம். மேற்படி இடத்தில் விளக்குகள் எப்போதும் இருக்கும் என்றால் இடது புறம் வெளிச்சம் கிடையாது. வலது புறத்தில் உள்ள வெளிச்சம் நாங்கள் இருந்த இடத்திற்கு வராது. சாலை அப்போது தான் அங்கு

போட்டு இருந்தார்கள். அந்த இடத்தில் எப்போதும் வெளிச்சம் இருக்கும் என்றும் நான் மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் லாரி ஓட்டுநருக்கு வெளிச்சம் இருந்ததால் அங்கு வாகனம் நின்று கொண்டு இருந்தது தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் வெளிச்சம் போதுமானதாக இல்லை. பொதுவாக ஒரு பேருந்து அந்த இடத்தில் நின்று கொண்டு இருந்தால் அந்த இடத்தில் பேருந்து நின்று கொண்டு இருப்பது பின்னால் வரும் வாகன ஓட்டுநருக்கு தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) நான் ஆம்னி பேருந்தில் லக்கேஜ் ஏற்றிக்கொண்டு இருக்கும்போது எனக்கு போதுமான வெளிச்சம் அங்கு இருந்தது என்று சொன்னால் அங்கு இல்லை. நான் போன் டார்ச் வெளிச்சத்தின் அடிப்படையில் தான் லக்கேஜ் ஏற்றிக் கொண்டு இருந்தேன். நாங்கள் 7 பேர் இருக்கும்போது அங்கு எனது கணவர் போனின் மூலம் எனக்கு தேவையான வெளிச்சம் அந்த இடத்தில் இருந்தது. அந்த போனில் வெளிச்சம் மற்றும் வாகனத்தின் பின்புறம் சிவப்பு நிற விளக்கு வெளிச்சம் அந்த இடத்தில் வாகனம் நின்று கொண்டு இருந்ததற்கு போதுமான வெளிச்சம் தான் என்றால் சரிதான். அந்த சமயத்தில் லாரியின் ஓட்டுநர் வேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து அவர் தான் விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் பேருந்து அங்கு நின்றது தான் விபத்திற்கு காரணம் இருவரில் பேரிலும் தவறு உள்ளது.

10) மேற்படி இடத்தில் வண்டியை நாங்கள் நிறுத்த சொன்னதும் தான் அந்த விபத்திற்கு நாங்களும் ஒரு காரணம் என்று சொன்னால் சரியல்ல. லாரியின் ஓட்டுநர் செல்போன் பார்த்துக்கொண்டு வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை இரண்டு பேரிலும் இருந்தபோதிலும் வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் லாரி ஓட்டுநர் தான் என்பதால் அவர் மீது தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் அவ்வாறு தான் போடப்பட்டுள்ளது. வேகமாக வந்தது லாரியின் தவறு நின்று

கொண்டு இருந்தது பேருந்தின் தவறு. பேருந்து ஓட்டுநர் மீது தவறு இல்லாத காரணத்தினால் தான் அந்த 279 பிரிவின் கீழ் பேருந்து ஓட்டுநர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பேருந்து சேலத்தில் இருந்து சென்னை செல்வதற்காக நான் சேலம் சென்று ஏறுவற்கு பதிலாக என் வசதிக்காக பேருந்தை தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தி ஏறி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த

11) இடத்தில் பயணிகளை ஏற்றும் நிறுத்தம் அந்த பேருந்தில் உள்ளது. நானும் லாரி ஓட்டுநரும் இந்த விபத்திற்கு காரணம் என்றும் பேருந்து ஓட்டுநர் இந்த விபத்திற்கு எவ்வித காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவில் 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.30 18:06:30 +0530

**Accidents Claim Tribunal, Attur.**